Opération vaccination COVID-19

## தடுப்பூசியைப் பற்றிய நல்ல கேள்விகள் நம் அனைவருக்கும் உள்ளன

**COVID-19 தடுப்பூசி பாதுகாப்பானதா?**

கனடாவில் அளிக்கப்படுகின்ற COVID-19 தடுப்பூசிகள் தரமானவை மற்றும் ஆற்றல் வாய்ந்தவையாகும். அறிவியல் வல்லுநர்கள் மற்றும் மருத்துவர்களைக் கொண்ட கனடாவின் சுகாதாரக் குழுவால் அவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசிகள் கனடாவில் உள்ள எந்தவொரு பிற தடுப்பூசியைப் போன்ற அதே தரம் மற்றும் பாதுகாப்புத் தரநிலைகளைக் கொண்டிருக்கின்றன.

கனடாவும், கியூபெக்கும் மிகவும் பரந்த அளவிலான தடுப்பூசி கண்காணிப்பு அமைப்பைக் கொண்டுள்ளன.

**இந்தத் தடுப்பூசிகள் COVID-19 க்கு எதிராக எவ்வளவு ஆற்றல் வாய்ந்தவை?**

அனைத்து COVID-19 தடுப்பூசிகளும் தீவிரமான காய்ச்சல், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல் மற்றும் இறப்புக்கு எதிராக 80% க்கும் மேல் ஆற்றல் வாய்ந்தவையாகும். உங்களுக்குத் தடுப்பூசிகள் பற்றிய சந்தேகங்கள் இருந்தால், தடுப்பூசி மையத்தில் உங்களைப் பரிசோதிக்கும் மருத்துவ நிபுணரிடம் பேசுங்கள். அப்போது ஒரு விவரமறிந்த முடிவை உங்களால் எடுக்க முடியும்.

**ஏன் தடுப்பூசி செலுத்திக் கொள்வது முக்கியமானது?**

COVID-19 க்கு எதிரான தடுப்பூசிகள் தீவிரமான காய்ச்சலையும், சிக்கல்கள் ஏற்படும் அபாயங்களையும் தடுக்கின்றன. COVID-19 க்கு எதிராகத் தடுப்பூசி அளிப்பதன் முக்கியமான நோக்கம், COVID-19 உடன் மிகவும் அபாய கட்டத்தில் உள்ளவர்கள் மருத்துமனைகளில் அனுமதிக்கப்படுதல்களையும், இறப்புகளையும் குறைப்பதாகும். மேலும் இது சுகாதார மற்றும் சமூக சேவைகளைப் பராமரிப்பதிலும், இயன்ற வரையில் விரைவாக மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப உதவுவதற்கும் கூட அது பங்களிக்க வேண்டும்.

**யார் ஆபத்தில் இருக்கிறார்கள்?**

முதியவர்கள் COVID-19 மூலம் சிக்கல்கள் ஏற்படுகின்ற, மற்றும் இறக்கின்ற அதிகபட்ச அபாயத்தில் இருக்கிறார்கள். நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள், நோய்த்தொற்று பாதிக்கப்பட்ட நபர்களுடன் அடிக்கடி தொடர்பில் இருப்பவர்கள் அல்லது குறைவான நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்களும் கூட அபாயத்தில் இருக்கிறார்கள், ஆனாலும் வயதே முக்கியமான அபாய காரணியாக நீடிக்கிறது.

**எங்கே நான் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முடியும்?**

அப்பாயிண்ட்மெண்ட் உடனும் அல்லது இல்லாமலும் கூட நீங்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம். உங்களுக்கு அருகிலுள்ள தடுப்பூசி செலுத்தும் இடங்கள் மற்றும் செலுத்தும் தேதிகளை அறிந்து கொள்ள, வருகை தரவும் Québec.ca/vaccinCOVID தடுப்பூசி இலவசம். தனியார் துறையில் COVID-19 தடுப்பூசி வழங்கப்படவில்லை.

**எனக்கு இன்டர்நெட்டைப் பயன்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் என்ன செய்வது?**

இன்டர்நெட்டைப் பயன்படுத்துவதில் உங்களுக்குச் சிக்கல் ஏற்பட்டால், உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்களிடம் உதவி கேளுங்கள். உங்களிடம் இன்டர்நெட் இணைப்பு இல்லை என்றால், 1-877-644-4545 (கட்டணமில்லா தொலைப்பேசி எண்)க்கு அழைக்கவும்.

**என்னிடம் மருத்துவக் காப்பீட்டு அட்டை இல்லை என்றாலும் கூட நான் தடுப்பூசி பெறலாமா?**

நீங்கள் நிரந்தரக் குடிமகனாக இல்லாமல், உங்களிடம் சுகாதாரக் காப்பீடு அட்டையும் இல்லை என்றாலும் நீங்கள் COVID-19 தடுப்பூசியைப் பெற முடியும், ஏனென்றால் இது கியூபெக்கில் வாழ்கின்ற ஒவ்வொருவரையும் பாதுகாப்பதற்கான பொது சுகாதார நடவடிக்கையாகும். **உங்கள் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், நீங்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த விவரமானது தடுப்பூசிப் பதிவகத்தில் தனி நபர்களின் அடையாளத்தை நிறுவதற்கு மட்டுமே முற்றிலும் பயன்படுத்தப்படுகிறது.** இதை அதிகாரிகளுக்கு அனுப்புவதோ அல்லது வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதோ கிடையாது. உங்களிடம் மருத்துவக் காப்பீட்டு அட்டை இல்லை என்றால், 1-877-644-4545 (கட்டணமில்லாத் தொலைப்பேசி எண்) க்கு அழைக்கவும்.

**சிறப்பான பாதுகாப்பைப் பெறுவதற்கு எனக்கு எத்தனை COVID-19 டோஸ்கள் தேவை?**

முதல் டோஸ் வேலை செய்வதற்கு குறைந்தது 14 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. பரவுவதைக் குறைக்கவும், அது வழங்குகின்ற பாதுகாப்பையும், பாதுகாப்பின் காலகட்டத்தையும் அதிகரிப்பதற்கும் இரண்டாவது டோஸ் அவசியமாகும். இரண்டாவது டோஸ் சுமார் ஒரு வாரத்துக்குப் பிறகு வேலை செய்கிறது. இந்த இரண்டாவது டோஸ் எடுத்துக் கொண்ட ஒரு வாரத்துக்குப் பிறகு, உங்களுக்குப் போதுமான பாதுகாப்பு கிடைக்கும். சிறந்த பாதுகாப்புக்கு, முதல் டோஸுக்குப் பிறகு எட்டு வாரங்கள் அல்லது அதற்குப் பிறகு தான் இரண்டாவது டோஸ் கொடுக்கப்பட வேண்டும்.

தடுப்பூசி செலுத்திக் கொள்வதற்கு குறைந்தது 21 நாட்களுக்கு முன்பு COVID-19 உள்ளவர்களுக்கு, ஒரே ஒரு டோஸ் தடுப்பூசி அவசியமாகும். தடுப்பூசியின் முதல் டோஸ் மாதிரி இந்த நோய்த்தொற்று நோயெதிர்ப்பு மண்டலத்தின் எதிர்விளைவைத் தொடங்கி வைக்கிறது. எனவே COVID-19 இருந்த ஒரு நபருக்குக் கொடுக்கப்படுகின்ற தடுப்பூசி டோஸ், ஒருபோதும் நோய்த்தொற்று ஏற்படாத ஒரு நபருக்கு இருக்கின்ற மாதிரி ஒரு பூஸ்டர் விளைவைக் கொண்டிருக்கும். COVID-19 இருந்த ஒரு நபர் இரண்டு டோஸ் தடுப்பூசிகள் செலுத்திக் கொள்வது அபாயமானது அல்ல என்பதை நினைவில் கொள்ளவும்.

உங்கள் இரண்டாவது டோஸுக்காக தடுப்பூசி மையத்தில் உங்களுக்கு இரண்டாவது அப்பாயிண்ட்மெண்ட் கொடுக்கப்படும்.

**எனக்குத் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்று கிடைக்குமா?**

கியூபெக்கில், உங்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும்போது, நீங்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான ஒரு காகித நகல் உங்களுக்கு வழங்கப்படும். இது COVID-19 உள்ளிட்ட அனைத்துத் தடுப்பூசிகளுக்கும் பொருந்தும். உங்களுக்கு COVID-19 தடுப்பூசி செலுத்தப்பட்ட பிறகு, தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான டிஜிட்டல் சான்றும் கிடைக்கிறது. தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான இந்த சான்று, உங்கள் கணிப்பொறி அல்லது மொபைல் டிவைஸில் பதிவிறக்கக் கூடிய ஒரு PDF ஃபைலாகும். உங்களிடம் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான டிஜிட்டல் சான்று இருந்தாலும் கூட, உங்கள் சான்றின் காகித நகலை வைத்திருக்குமாறு உங்களை **உறுதியாக** அறிவுறுத்துகிறோம்.

நீங்கள் COVID-19 தடுப்பூசி செலுத்திக் கொண்ட பிறகு, **சுய-சேவை போர்ட்டலில்** தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான உங்கள் டிஜிட்டல் சான்றையும் நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதை அணுகுவதற்கு, செல்லவும் https://covid19.quebec.ca/PreuveVaccinale போர்ட்டலுக்குள் சென்றவுடன், பின்வரும் விவரங்களை வழங்குமாறு உங்களிடம் கேட்கப்படும்:

- உங்கள் முதல் மற்றும் கடைசிப் பெயர்;
- உங்கள் பிறந்த தேதி;
- உங்களுக்கு முதல் COVID-19 தடுப்பூசி செலுத்தப்பட்ட தேதி;
- உங்களுக்கு முதலில் செலுத்தப்பட்ட COVID-19 தடுப்பூசியின் பிராண்டு பெயர்;
- உங்கள் மருத்துவக் காப்பீட்டு எண்.

ஒரு பிழைச் செய்தி தோன்றாத பட்சத்தில், இந்த விவரங்கள் சரிபார்க்கப்பட்டவுடன், தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான உங்கள் டிஜிட்டல் சான்றை நீங்கள் பதிவிறக்க இயலும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், போர்ட்டலில் உங்கள் சான்றை உங்களால் பதிவிறக்க இயலாது. பின்வருமாறு இருந்தால் ஒரு பிழை செய்தி காட்டப்படுகிறது:

- நீங்கள் வழங்கியுள்ள விவரங்களில் சில, கியூபெக் தடுப்பூசி பதிவகம் அல்லது Régie de l'assurance maladie du Québec (RAMQ) பதிவேட்டில் உள்ள விவரங்களுடன் பொருந்தவில்லை.
- உங்கள் பெற்றோர் RAMQ பதிவேட்டில் பதிவு செய்யவில்லை.

தடுப்பூசி செலுத்திக் கொண்ட அனைத்து நபர்களுக்கும் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான டிஜிட்டல் சான்றை வழங்குவதற்கான வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
14 வயது அல்லது அதற்கும் கீழ்ப்பட்டவர்கள் போர்ட்டலின் மூலம் தங்கள் சான்றைப் பதிவிறக்க இயலாது.

தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான உங்கள் காகித அல்லது டிஜிட்டல் நகலில் பிழைகள் இருந்தால், நீங்கள் அவற்றை சரி செய்ய வேண்டும். COVID-19 தடுப்பூசி- சிக்கல்களைத் தீர்த்தல் சேவையைத் தேர்வு செய்வதன் மூலம், ஆன்லைனில் Clic Santé இல் ஒரு அப்பாயிண்ட்மென்ட்டை மட்டும் பதிவு செய்யுங்கள். பிறகு உங்கள் மருத்துவக் காப்பீட்டு அட்டை அல்லது பிற அடையாளச் சான்றுகளுடன், நீங்கள் நேரடியாக ஒரு தடுப்பூசி மையத்துக்குச் செல்ல வேண்டும்.

தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்று பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, வருகை தரவும்:
https://www.quebec.ca/en/health/health-issues/a-z/2019-coronavirus/progress-of-the-covid-19-vaccination/proof-covid-19-vaccination

**நினைவில் கொள்ளவும்: தடுப்பூசி COVID-19 உடன் தொடர்புடைய அறிகுறிகளைக் குறைத்து, மருத்துவச் சிக்கல்கள் ஏற்படாமல் தடுக்கிறது. தடுப்பூசி செலுத்திக் கொள்வதே பாதுகாப்பின் சிறந்த வடிவமாகும்.**